**வணிகவரித்துறை**
**மானியக் கோரிக்கை எண் 10**
**கொள்கை விளக்கக் குறிப்பு 2004–05**
**வணிகவரிகள்**

நிலையான பொருளாதார வளர்ச்சி என்பது நிதி ஆதாரத்தை ஒருங்கிணைப்பதை பொருத்தது என்பதை அறிந்த தமிழக அரசு விரிவான நிதி சீர்திருத்த முன்முயற்சிகளை ஏற்கனவே துவங்கியுள்ளது. சமயோசித வரி சீர்திருத்த நடவடிக்கைகள், வரி விகித சீரமைப்பு மற்றும் வரி வசூல் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் மாநில அரசின் நிதிநிலை சீர்குலைவு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அரசின் வருவாயில் சுமார் 70 சதவிகிதம் வணிகவரி மூலம் ஈட்டப்படுகிறது.

2003–2004 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் பருவ மழை பொய்த்து கடும் வறட்சி நிலவியதால் பல்வேறு துறைகளில் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், குறிப்பிடத்தக்க அளவில் புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படாமலேயே, வணிகவரித்துறையின் சீரிய முயற்சியால், வரி வசூலில் முந்தைய ஆண்டைவிட 15.27 சதவிகிதம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அனைத்திந்திய சராசரி வளர்ச்சி விகிதமாகிய 8.4 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில் வணிகவரித்துறையின் செயல்பாடு பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

2001–02 ஆம் ஆண்டில் ரூ.8,905 கோடியாக இருந்த வரி வருவாய் 2002–03ஆம் ஆண்டில் ரூ.10,200 கோடியாகப் பெருகி, 14.55 சதவிகித வளர்ச்சி விகிதத்தை எட்டியது. 2003–04 ஆம் ஆண்டில் ரூ.11,757 கோடி வரிவசூல் செய்யப்பட்டது.

## 2 துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்

வணிகவரி ஆணையர் துறையின் தலைவராக செயல்பட்டு வருகின்றார். ஆணையருக்கு தலைமையகத்தில் இணை ஆணையர்களும், துணை ஆணையர்களும், மற்ற அலுவலர்களும் உதவியாகப் பணிபுரிகின்றனர். வணிகவரித்துறையின் பிரிவுகள் விவரம் வருமாறு :

### 2.1 வரிவிதிப்புப் பிரிவு

வரிவிதிப்புப் பிரிவில், வணிகவரி அலுவலர், துணை வணிகவரி அலுவலர் மற்றும் உதவி வணிகவரி அலுவலர் ஆகியோர் வரிவிதிப்பு அலுவலர்களாக உள்ளனர். மாநிலத்தில் மொத்தம் 323 வரிவிதிப்பு அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 236 வட்டங்களுக்கு வணிகவரி அலுவலர்கள் தலைமை அலுவலர்களாகவும், 81 வட்டங்களுக்கு துணைவணிகவரி அலுவலர்கள் தலைமை அலுவலர்களாகவும் உள்ளனர். இவை தவிர, சென்னையில் நான்கு, கோவையில் இரண்டு விரைவு வழி வரிவிதிப்பு வட்டங்கள், உதவி ஆணையர்களைத் தலைமை அலுவலராகக் கொண்டு செயல்படுகின்றன. வரிவிதிப்பு அலுவலர்கள் உதவி ஆணையர்களின் நேரடி கண்காணிப்பில் பணிபுரிகின்றனர். இவர்களது பணியினை துணை ஆணையர்கள் மேற்பார்வையிடுகிறார்கள்.

### 2.2 தணிக்கைப் பிரிவு

ஒவ்வொரு வணிகவரித்துறை மாவட்டத்திலும் ஒரு வணிகவரி அலுவலர் மற்றும் துணை வணிகவரி அலுவலர் ஆகியோரைக் கொண்ட உள்ளீட்டுத் தணிக்கைக் குழு, வரிவிதிப்பு உதவி ஆணையரின் மேற்பார்வையில் செயல்படுகிறது. தணிக்கைக்குழு ஒவ்வொரு காலாண்டிற்கும், வரிவிதிப்புகள், வருவாய் வரவுகள், திருப்பியளித்த இனங்கள் ஆகியவற்றில் உள்ள குறைகளை, வரிவிதிப்பு வட்ட வாரியாக,



சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு துணை ஆணையர்கள் வகுக்கின்ற தணிக்கை நிகழ்ச்சி நிரல் வரிசையில் தணிக்கைக் குறிப்பாகத் தயாரித்து அனுப்புகின்றன. அவற்றின் மீதான குறை நிவர்த்தி அறிக்கையினை சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் ஆகியோர் கண்காணிக்கின்றனர்.

இது தவிர, மாநிலக் கணக்காயர் அலுவலக தணிக்கைக் குழு வரிவிதிப்பு கோப்புகள் மற்றும் திருப்பி அளித்த வரித்தொகை ஆகியவைகளை தணிக்கை செய்கிறது. ஆணையர் அலுவலகத்தில் இம்முக்கியப் பணி மாநில அளவில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### 2.3 மேல்முறையீட்டுப் பிரிவு

மேல்முறையீட்டு உதவி ஆணையர் முதல் மேல்முறையீட்டு அலுவலராவார். மாநிலத்தில் மொத்தம் 20 மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும், 2 மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் உள்ளனர். ஒவ்வொரு மேல்முறையீட்டு அலுவலர் முன்பும் துறை சார்பாக எடுத்துரைக்க வணிகவரி அலுவலர் நிலையில் ஒரு துறைப் பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். இரண்டாவது மேல்முறையீடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் செய்யப்படுகிறது. சென்னையில் முதன்மை தீர்ப்பாயமும், சென்னை, கோவை, மதுரையில் கூடுதல் ஆயங்களும் உள்ளன.

### 2.4 செயலாக்கப் பிரிவு

செயலாக்கப் பிரிவு ஏழு துணை ஆணையர்கள் கட்டுப் பாட்டில் இயங்குகின்றது. இதுதவிர, இடை மாநில ஆய்வுப் பிரிவில் ஒரு துணை ஆணையரும் உள்ளார்.

அ. செயலாக்கப் பிரிவில், 10 உதவி ஆணையர்களும், 15 வணிகவரி அலுவலர்களும் உள்ளனர். உதவி ஆணையர் மற்றும் வணிகவரி அலுவலர்களின் கீழ் துணை வணிகவரி அலுவலர் மற்றும் உதவி வணிகவரி அலுவலர் அடங்கிய குழு அலுவலர்கள் உள்ளனர். இவை தவிர சுற்றும் படை, புகை வண்டி நிலையங்கள் மற்றும் சரக்குப்பிரிவுகளிலும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

ஆ. வரிஏய்ப்பினை கண்டு பிடிக்கும் பொருட்டு செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் கடைத் தணிக்கை மற்றும் வீடு சோதனை பணியில் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் நேரடி மற்றும் மறைமுக வரிஏய்ப்புகள் தடுக்கப்படுகின்றன. இடைமாநில ஆய்வுக்குழு அலுவலர்கள், பிற மாநிலங்களிலிருந்து பெறப்பட்ட வடிப்பு நகல்களை இம்மாநில வணிகர்களிடம் சரிபார்ப்பதன் மூலம் வரிஏய்ப்பினை கண்டுபிடித்து வருகின்றனர்.

இ. கடந்த 2003-2004ம் ஆண்டில், மொத்தம் 6,466 வணிகத் தலங்கள் சோதனையிடப்பட்டு, அதில் 5,094 தலங்களில் வரிஏய்ப்புகள் கண்டறியப்பட்டன. அதன் மூலம் ரூ.35.18 கோடி வரி மற்றும் தண்டத்தொகையாக வசூலிக்கப்பட்டது.

### 2.5 சோதனைச் சாவடிகள்

மாநில எல்லையில், 26 சோதனை சாவடிகளும், மூன்று உள் சோதனைச் சாவடிகளும் உள்ளன. வணிகவரி அலுவலர்கள் பெரிய சோதனைச் சாவடிகளின் தலைமை அலுவலர்களாக உள்ளனர். உதவி வணிகவரி அலுவலர்கள், தக்க உதவியாளர்களுடன் சோதனைச் சாவடிகளை நிர்வகிக்கின்றனர்.

கடந்த 2003-04 ஆம் ஆண்டில் சோதனைச் சாவடிகள் மூலம் மொத்தம் ரூ.70 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது



### 2.6 புள்ளி விவரம் மற்றும் ஆய்வுப் பிரிவு

புள்ளியியல் மற்றும் ஆய்வுப் பிரிவின் தலைவராக புள்ளியியல் இணை இயக்குநர் செயல்படுகிறார். ஒவ்வொரு வணிகவரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் ஒவ்வொரு கோட்டத்திலும் இளநிலை ஆய்வு அலுவலரும் உள்ளனர். புள்ளியியல் மற்றும் ஆய்வுக் குழு, ''வணிகவரித் துறை ஒரு கண்ணோட்டம்'', ''வணிகவரித்துறை தேர்வுநிலை அறிக்கை'' ஆகிய இரு வருடாந்திர அறிக்கைகளை ஆண்டுதோறும் வெளியிடுகின்றது. இவை தவிர, சிறப்பு காலமுறை அறிக்கைகளையும் வெளியிடுகின்றது. மேலும், இக்குழு ஒவ்வொரு மாதத்திலும், 100 முக்கிய வணிகர்களிடம் ஏற்படும் வருவாய் இழப்பின் காரணத்தினை ஆய்வு செய்யும் பணியினையும் மேற்கொண்டுள்ளது.

### 3. வணிகவரித் துறையில் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

கீழ்க்கண்ட சட்டங்கள் வணிகவரித்துறையில் அமலில் உள்ளன :-

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970
3. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
4. தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகன நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
5. தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
6. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939
7. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம் ,1981
8. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம் ,1935
9. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம் ,1983

### 4. வரி வருவாய் நிலவரம்

கடந்த மூன்று ஆண்டுகளில் அனைத்து வரி சட்டங்களின் மூலம் ஈட்டிய வரி வருவாய் விவரம் வருமாறு:

| ஆண்டு | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி விகிதம் (%) |
|---|---|---|
| 2001–2002 | 8905 | 2.78 |
| 2002–2003 | 10200 | 14.55 |
| 2003–2004 | 11757 | 15.27 |

### 5. சட்ட வாரியாக கடந்த மூன்று ஆண்டு வருவாய்

சட்டவாரியாக கடந்த மூன்று ஆண்டு வரி வருவாய் விவரம் வருமாறு :

| | (ரூபாய் கோடியில்) | | |
|---|---|---|---|
| சட்டம் | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
| 1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 7541 | 8507 | 9790 |
| 2. மத்திய விற்பனை வரிச் சட்டம் | 904 | 982 | 1186 |
| 3. கேளிக்கை வரிச் சட்டம் | 68 | 71 | 75 |
| 4. பந்தய வரிச் சட்டம் | 6 | 5 | 5 |
| 5. ஆடம்பர வரிச் சட்டம் | 89 | 82 | 63 |
| 6. நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் பொருட்கள்) | 297 | 553 | 638 |
| **மொத்தம்** | **8905** | **10200** | **11757** |



### 6. வணிகவரித் துறையின் வருவாயும் செலவும்

வணிகவரித் துறையின் வருவாயும் செலவும் பின்வருமாறு:

| | (ரூபாய் கோடியில்) | | |
|---|---|---|---|
| தலைப்பு | 2001–2002 | 2002–2003 | 2003–2004 |
| 1. வரிவருவாய் | 8905 | 10200 | 11757 |
| 2. செலவுகள் | 94.23 | 93.27 | 93.70 |
| 3.செலவின் சதவிகிதம் | 1.06% | 0.91% | 0.80% |

### 7. 2004–05 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகள்

1. ஈரபேரீச்சம் பழத்தின் மீதான வரிவிகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக குறைக்கப்–பட்டுள்ளது.
2. சிறுநீரகம் பழுதடைந்த நோயாளிகளின் சிகிச்சைக்குப் பயன்படும் சி.ஏ.பி.டி (Continuous Ambulatory Peritoneal Dialysis) என்ற திரவ மருந்திற்கும் AIDS எனப்படும் உயிர்கொல்லி நோய்க்கு வழங்கப்படும் உயிர் காக்கும் மிக முக்கிய பத்து மருந்துகளுக்கும் முழுவரிவிலக்கு வழங்கப்பட்டது.
3. சுற்றுச் சூழல் பாதிப்பினைக் குறைக்கும் பொருட்டும், மாசுக்கட்டுப்பாட்டுச் சாதனங்களை நிறுவுவதற்கு ஊக்கமளிக்கும் வகையிலும் சுற்றுச் சூழல் பாதிப்பைத் தடுக்கும் கருவிகளில் 25 இனங்களுக்கு வரிவிகிதம் 12 சத விகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.

4. கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கைவினைப் பொருட்கள் மீதான வரி விகிதம் 4 சதவிகிதத்திலிருந்து 2 சத விகிதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.
5. இசைக்கலைஞர்களின் நலனைக் கருதி இந்திய இசைக் கருவிகளுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்–பட்டுள்ளது.
6. கோழி வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க கோழித்தீவன தயாரிப்பில் பயன்படும் சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரி 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.
7. தமிழக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மறு விற்பனை செய்யும் நுகர்வோர் பொருட்கள் மீதான ஒரு சதவிகித மறுவிற்பனை வரிக்கு விலக்களிக்கப்–பட்டுள்ளது.
8. மத்திய அரசின் நிறுவனமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC) கேஸ் அத்தாரிட்டி ஆப் இந்தியா லிட் (GAIL ) மூலமாக தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விற்கும் இயற்கை எரிவாயுவின் மீதான விற்பனை வரியை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப் பட்டுள்ளது. கேஸ் அதாரிட்டி ஆப் இந்தியா லிட்., (GAIL) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்கும் இயற்கை வாயுவின் இரண்டாம் விற்பனை மீதான ஒரு சதவிகித மறு விற்பனை வரிக்கு விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது.
9. பின்னலாடை தயாரிக்கும் தொழில் நிறுவனங்களின் இன்னல்களைக் குறைத்திடும் பொருட்டு, வெளிமாநிலத்தில் உள்ள பதிவு செய்யாத வணிகர்களுக்கு இடைமாநில விற்பனை செய்யும் பின்னலாடைக்கு 10 சதவிகித வரியினை



செலுத்திவிட்டு 9 சதவிகிதத் தொகையினை ஊக்குவிப்பு மானியமாக திருப்பி அளிக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. கிளை மற்றும் பிறமாநிலங்களுக்கு ஒப்படைப்பு விற்பனை செய்யும் வணிகர்களுக்கு இது பொருந்தாது.

10. தமிழ்நாட்டை கணினி வன்பொருள் மையமாக நிலைநிறுத்த கணினி உபரி மற்றும் உதிரி பொருட்களின் இடைமாநில விற்பனை மீதான மத்திய விற்பனைவரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
11. விற்பனை வரியினை உரிய காலத்தில் செலுத்தாவிட்டால், ஒரு மாதத்திற்கு 2 சதவிகிதம் என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 24 சதவிகிதம் வட்டி விதிக்கப்படுகிறது. இவற்றைக் குறைக்கும் பொருட்டும், வரிவருவாயைப் பெருக்கும் பொருட்டும், முதல் 90 நாட்களுக்குள் செலுத்தப்படும் வரிக்கு வட்டி மாதத்திற்கு 1.5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## 8. வணிகவரி பணியாளர் பயிற்சி மையம்

வணிகவரித் துறையில், அலுவலர் மற்றும் பணியாளருக்கு பயிற்சி அளிக்க வணிகவரி பணியாளர் பயிற்சி மையம் 1982ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்துறையில் பணிபுரியும் ஊழியர் மற்றும் அலுவலர்களுக்கு வரிவிதிப்பு தொடர்பான துல்லியமான நடப்பு விவரங்களையும், வரி விதிப்பு முறைகளையும் குறித்த பயிற்சி அளிப்பதே இந்த பயிற்சி மையத்தின் நோக்கமாகும். மேலும் இத்துறை கணினி மயமாக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பான பயிற்சிகளும் மதிப்புகூட்டு வரி விதிப்பு தொடர்பான பயிற்சிகளும் இந்த பயிற்சி மையம் மூலம் அனைத்து வணிகவரித்துறை பணியாளர்களுக்கும், வணிகர்களுக்கும் அளிக்கப்படுகிறது.

அ) மேலும், இந்தப் பயிற்சி மையம் "சுருக்க அடிப்படை பயிற்சி" மற்றும் "சுருக்க கணினி மென்பொருள் பயிற்சி", பவானிசாகரில் அரசு ஊழியர் பயிற்சி மையத்தில் அளிக்கப்படுவதுபோல், 35 பணிநாட்களுக்கு இத்துறையின் உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது.

(ஆ) பயிற்சி மையத்தில் மேற்கண்ட பயிற்சிகள் அனைத்தும், உதவி ஆணையர் பணி நிலையில் உள்ள இரு முதுநிலை விரிவுரையாளர்களாலும், ஒரு வணிகவரி அலுவலர் மற்றும் ஒரு உதவி இயக்குநர் (புள்ளியியல் துறை) ஆகியோராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி மையத்தின் இயக்குநராக துணை ஆணையர் பணிநிலையில் ஒரு அலுவலர் பொறுப்பில் உள்ளார்.

(இ). 2003–04ம் ஆண்டு, பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர் விவரம் பின் வருமாறு: -

| | **அடிப்படைப் பயிற்சி** | **பணியிடைப் பயிற்சி** | **கணினிப் பயிற்சி** | **மதிப்புக் கூட்டு வரி பயிற்சி** |
|---|---|---|---|---|
| வணிகவரி அலுவலர் | 14 | 168 | 584 | 1277 |
| துணை வணிகவரி அலுவலர் | - | 288 | | |
| உதவி வணிகவரி அலுவலர் | 245 | - | 1215 | |
| பணியாளர் | - | - | | |



**9. கணினி மையம்**

ஆரம்பக் கட்டத்தில் சென்னையில் உள்ள அரசு புள்ளி விவர மையத்தில் உள்ள முதன்மை கணினியைப் பயன்படுத்தி ஆண்டு வரிவிதிப்பு புள்ளி விவரம் தயாரிக்கப்பட்டது. பின்னர், 1988ல் சென்னை கிரீம்ஸ் சாலையில் இத்துறைக்குத் தனியாக கணினி மையம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் திருச்சி, மதுரை மற்றும் கோவை ஆகிய இடங்களில் துணை மையங்கள் 1994ல் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நான்கு மையங்களிலும், தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக உள்ள சுமார் ஒரு லட்சம் வணிகர்களின் மாதாந்திர நமூனா மற்றும் 323 வரிவிதிப்பு வட்டங்களில் பெறப்படும் தகவல்கள் கணினி மூலம் பதிவு செய்யப்படுகின்றன. மாதாந்திர நமூனாக்களில் உள்ள பொருட்களின் விற்பனைத் தொகை வாரியாகவும், வரிவிகிதம் மற்றும் வரிவருவாய் வாரியாகவும் 1000 முன்னணி வணிகர்களின் வணிக விவரங்கள் கணினி மயமாக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 323 வரிவிதிப்பு வட்டங்களிலும் அடிப்படை பணியான வணிகர் விவரப் பட்டியலை கணினியில் பதிவு செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டமாக, மைய தொடர்பு நிலையத்துடன் 29 சோதனைச்சாவடிகளுக்கு அடிப்படை வசதிகளுடன் VSAT மூலம் இணைப்பு வசதி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 29 சோதனைச் சாவடிகளின் தேவைகளை கவனிக்க ஏதுவாக சென்னை மைய தொடர்பு நிலையத்தை வலுப்படுத்த 2 Mbps தொடர்பு வழிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது வரிவிதிப்பு அலுவலகம், செயலாக்கப்பிரிவு மற்றும் மேல்முறையீடு அலுவலகங்களில் உள்ள கணினி மேற்கண்ட இணைப்புக்கு போதுமானதாக இல்லையாதலால் சமச்சம (Peer to Peer) இணைப்பின் மூலம் ஒவ்வொரு வரிவிதிப்பு வட்ட தகவல் உடயோகிப்பாளர்களுக்கும், செயலாக்க மற்றும் மேல்முறையீடு அலுவலர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்த

உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூடுதல் கணினி மற்றும் அச்சுப்பொறி இல்லாத வேலூர் மற்றும் திருச்சி கோட்டங்கள் உள்பட சென்னை, கோவை மற்றும் மதுரையில் உள்ள கணினி மையங்களுக்கு 150 கூடுதல் கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில், கணினி மயமாக்கப்படும் பணியை மேலும் விரிவுபடுத்த மூன்றாம் கட்டமாக ரூபாய் 5 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டம் முடிந்தபிறகு சோதனைச் சாவடிகள் தொலைபேசியின் துணை இன்றி கணினி வழியாக புள்ளி விவரங்கள் அனுப்ப முடியும்.

வணிகவரித்துறை தொடர்பாக பொதுமக்கள் தகவல்கள் பெற www.tnsalestax.com என்ற தனி இணைய தளம் தொடங்கப்பட்டுள்ளது.

## 10. வணிகர் நல வாரியம்

வணிகவரித் துறையின் பெரும்பான்மையான வருவாய், பொதுமக்களிடமிருந்து வணிகர் சமுதாயத்தின் மூலமாகப் பெறப்படுகிறது . இதனை கருத்திற்கொண்டு வணிகர் சமுதாயத்தின் நலத்துக்காக பல திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. வணிகர் நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்காக வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், வணிகவரித்துறை அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு அரசாணை எண்.74 வணிகவரித்துறை, நாள் 27.6.2003ன்படி இவ்வாரியம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் உறுப்பினர்களாக, அலுவலர்–உறுப்பினரன்றி வணிகர்கள் சார்பாக 16 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜுன் 2003 ல்



அரசு இவ்வாரியத்திற்கு ரூ.24.27 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

இந்த வாரியத்தின் உறுப்பினராகும் தகுதி எல்லா வணிகர்களுக்கும் உண்டு. இதற்கு ஒவ்வொரு உறுப்பினரும் ரூ.250/– கட்டணமாக செலுத்தவேண்டும். இப்போது வாரியத்தில் 40,312 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் மூலம் ரூ. 72,39,300/– பதிவுக் கட்டணமாகப் பெறப்பட்டுள்ளது.

**31.3.2004 வரை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி விவரம்**

| வரிசை எண் | உதவி விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | <u>குடும்ப நல உதவி</u> ரூ.20,000/– வீதம் இறந்து போன உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு | 252 | 65.15 |
| 2. | <u>மருத்துவ உதவி</u> ரூ.25,000/– வரை உறுப்பினர்களுக்கு | 29 | 6.46 |
| 3. | <u>கல்வி உதவி</u> ரூ.3,000/– வீதம் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு | 73 | 1.86 |
| 4. | <u>விளையாட்டு உதவி</u> விளையாட்டுக்கு ரூ.3000 லிருந்து ரூ.25000/ வரை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு | 2 | 0.15 |

| | | | |
|---|---|---|---|
| 5. | **தீ விபத்து உதவி** ரூ.5000 வீதம் உறுப்பினர்களின் கடைகள் மற்றும் கிடங்குகளுக்கு | 29 | 1.45 |
| 6. | **உடல் ஊனமுற்றோருக்கான உதவி** ரூ.20,000/ வரை உடல் ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு | 02 | 0.15 |
| 7. | **உயர்மதிப்பெண் பெற்றவர்களுக்கான உதவி ரூ.5000/ வரை** உயர்மதிப்பெண் பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு | 6 | 0.20 |
| | **மொத்தம்** | **393** | **75.42** |

**11. மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக்குழு**

ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அக்குழுவின் தலைவராகவும், அம்மாவட்ட வணிகவரி உதவி ஆணையர் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். குழுவின் உறுப்பினர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கிறார். அந்தந்த மாவட்டத்தில் வணிகர்களின் இடர்கள் குறித்து விவாதிக்க, இக்குழு காலாண்டிற்கு ஒரு முறை கூடுகிறது. கொள்கை தொடர்பானவை அரசின் முடிவுக்கு அனுப்பப்படும்.



**11 . 1 மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழு**

மாநில அளவிலான விற்பனைவரி ஆலோசனைக் குழு மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகவும், வணிகவரித் துறை அமைச்சரைக் கூடுதல் தலைவராகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. வணிகவரித்துறை செயலாளர் இக்குழுவின் செயலாளராகவும், வணிகவரி ஆணையர் அமைப்பாளராகவும் உள்ளனர். வணிகர்கள், வணிகக் கழகப் பிரதிநிதிகள் மற்றும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் ஆகியோர்களைக் குழு உறுப்பினர்களாக அரசு நியமித்துள்ளது. சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள் கூடுதல் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

**12. உள்ளாட்சி அமைப்புகளுக்கான உதவி**

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை உயர்த்த, கேளிக்கை வரி வருவாயில் இடத்திற்குத் தகுந்தவாறு 60 முதல் 70 விழுக்காடு மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு 31.3.1997 வரை வழங்கப்பட்டு வந்தது. அதன் பிறகு 90 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 2003–04 ஆம் ஆண்டில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு (31.12.2003 வரை) கொடுக்கப்பட்ட நிதி உதவி ரூ. 50.85 கோடியாகும்.

**13. குறை தீர்க்கும் பிரிவு**

வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் குறைதீர்க்கும் பிரிவு ஒன்று 1999 முதல் செயல்பட்டு வருகிறது. வணிகர்களின் குறைகள் மற்றும் புகார்களைப் பெறுகின்ற பிரிவாக அது இயங்கி வருகின்றது. இணை ஆணையர் (நிர்வாகம்) அப்பிரிவின் தலைவராகவும், இணை ஆணையர்

(மக்கள் தொடர்பு) மற்றும் இணை ஆணையர் (சுய சீராய்வு மனு) ஆகியோர் அதன் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர்.

### 14. நிர்வாகத்தை மேம்படுத்த எடுக்கப்பட்ட சில சிறப்பு நடவடிக்கைகள்

#### 14.1 ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி

தமிழகத்தில், வரி ஏய்ப்பினைத் தடுக்கவும், சோதனைச் சாவடிகளின் வழியாக எடுத்துச் செல்லப்படும் பொருட்களை கண்காணிக்கவும், தொடர்புடைய ஏனைய அரசுத்துறைகள் ஆய்வு நடத்த வசதியாகவும் முதற்கட்டமாக, ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் ஒன்று அல்லது இரண்டு இடங்களில் அமைக்கப்படலாம் என அரசாணை எண். 60 வணிகவரித்துறை 17.6.2002–ல் அறிவித்ததைத் தொடர்ந்து, ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது.

#### 14 . 2 'செல் போன்' (நடமாடும் தொலைபேசி) வழங்குதல்

வணிகவரித்துறையிலுள்ள செயலாக்கப் பிரிவின் பணித்தரம் மிகவும் சிறந்த முறையில் அமையும் பொருட்டும் துரிதப்படுத்தும் வகையிலும் 68 நடமாடும் தொலைபேசிகள் வாங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

#### 14.3. தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை

துறையின் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், பொதுமக்களின் ஆலோசனைகள், குறைகள் மற்றும் வரி ஏய்ப்பு விவரங்கள் குறித்த தகவல்களை உடனுக்குடன் சேகரிக்க, 'தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி ' ரூ.2,00,000/– செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கருவி வணிக வரி ஆணையர் அவர்களின் அறையில் பொருத்தப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கடந்த 20.02.2004 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இவ்வசதிக்கென தனியாக 044–28520535 என்ற எண் கொண்ட நேரடித் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



#### 14.4 ரொக்கப்பரிசு

வணிகவரித்துறையில் பணிபுரியும் அலுவலர்களின் திறமையை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும், செயலாக்கப்பிரிவில் மூன்று அலுவலர்களுக்கும், வரிவிதிப்புப் பிரிவில் மூன்று அலுவலர்களுக்கும் ரொக்கப்பரிசு வழங்கும் திட்டம் நவம்பர், 2003–ல் அறிவிக்கப்பட்டது. அதன்படி, துறையில் பாராட்டத்தகும் வகையில் பணிபுரிந்த நான்கு அலுவலர்களுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ.25,000/–வீதம் ரொக்கப்பரிசும் தகுதிச்சான்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.2.2004 அன்று வழங்கப்பட்டது.

#### 14.5 மோட்டார் வாகனங்கள் வழங்குதல்

வணிகவரித்துறையில் பழுதுபட்ட பழைய வாகனங்களுக்கு பதிலாக புதிதாக 36 மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்கு அரசாணை (2டி) எண்.79 வணிகவரித்துறை நாள் 29.09.2003–ல் ரூ.115.98 லட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. அதன்படி, 36 மோட்டார் வாகனங்கள் வாங்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 20.02.2004 அன்று துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

## 15. மதிப்புக் கூட்டு வரி

மதிப்புக் கூட்டு வரி முறையை நடைமுறைப்படுத்த அதிகாரமளிக்கப்பட்ட குழுவினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், வணிகவரித்துறை அமைச்சர் அவர்களை கூடுதல் தலைவராகவும் கொண்டு அரசு அமைத்துள்ளது. மதிப்புக் கூட்டு வரியின் கீழ் வணிகர் கொள்முதல் செய்தபோது செலுத்திய வரியை விற்பனை செய்யும்போது கழித்துக் கொள்ளும் வசதி உள்ளது. தற்போது முதல் விற்பனை மீது மட்டுமே வரி செலுத்தப்படுகிறது. மதிப்புக் கூட்டுவரி முறையில் வரிவிதிப்பு மற்றும் வரிவசூல் எல்லா விற்பனை நிலைகளிலும் இருக்கும். அதாவது செலுத்திய வரியை கழித்துக் கொள்ளும் வசதியுடன் இரண்டாம் மற்றும் அதற்கடுத்த ஒவ்வொரு விற்பனையும் வரிவிதிப்புக்கு உள்ளாகும்.

### 15.1 பயிற்சி

மதிப்புக் கூட்டு வரி விதிப்பு முறை புதியது என்பதால், இந்தத் துறையின் மூத்த அலுவலர்கள் மூலம் பிற அலுவலர்களுக்கும், வணிகர்களுக்கும் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வணிகர் சங்கங்கள் மற்றும் வணிகர் கழகங்கள் ஏற்பாடு செய்யும் கூட்டங்களிலும், கருத்தரங்குகளிலும் மூத்த அலுவலர்களை கலந்து கொள்ளச் செய்து, மதிப்புக் கூட்டு வரிவிதிப்புமுறை தொடர்பான விவரங்கள் அவ்வப்போது வணிகர்கள் அறிந்துகொள்ளத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**செ.ம. வேலுசாமி**
வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்